முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் முத்தானந்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

22.10.2018, திங்கட்கிழமை

1. **தருமம் காத்திடும் அரங்கா வாழ்க**
**தரணி போற்றிடும் அரசா வாழ்க**
**கரும வினைகளை போக்கி உலகில்**
**கண்ணியம்பட மக்களெல்லாம் வாழ**

2. வாழவே சன்மார்க்கம் விதித்து
வழிகாட்டி வாழ்ந்து காட்டி வரும்
காலம் வென்ற ஞானியே
கலியுக மாதவசி அரங்கனே

3. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் **விளம்பி துலை திங்கள்**
**வரங்களென பஞ்சதிகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 5ம் நாள் 22.10.2018, திங்கட்கிழமை)**
**வழங்கிடுவேன் ஒளி சூட்சும நூலை**

4. **நூலை முத்தானந்தர் யானும்**
நிலவுலக நலம் கருதி உரைப்பேன்
ஞாலமதில் அரங்கன் தருமம்
நல்மக்களை உருவாக்கி வருக

5. வருகின்ற தருமவான்களெல்லாம்
வாழும் ஞானியாக மாற்றும்
தருகின்ற தருமத்தின் வழி
தவசித்தியாக அடைய நேரும்

6. நேருமைபட அரச பதவிகளை
நிலவுலக நன்மைக்கு பயன்படுத்தி
தருமம் புரிகின்றவர்களெல்லாம்
தவசி அரங்கன் ஆசி பெற

7. ஆசி பெற கருமவினை கழன்று
ஆறுமுகன் ஆசிபட ஞானவானாவர்
நேசக்கரம்பட கட்டமுள்ளவரை
நெருங்கி தருமம் செய்யும் அன்பர்கள் எல்லாம்

8. எல்லோரும் அரங்கன் தொடர்பாய்
இணைந்து சேவை ஆற்ற
வல்லமை கிட்டி கலியுகத்தில்
வாழும் ஞானவான்கள் ஆவர்

9. ஆவரே அரங்கன் சேவையால்
அனைவரும் உயர்நிலை பெற்று
புவனம் மாற்றும் மாபெரும்
புண்ணிய சக்தியாக மாறுவர்

10. மாறிட கருமவினை சூழ்ந்த
மண்ணெல்லாம் தருமம் மிகுந்து
தேறிடும் தரும பூமியாக
தேசிகன் காண மாற்ற வந்த

11. வந்தநல் ஞான பூமியாகி
வையகமே ஞான ஆட்சி
சிந்தை செந்தூரான் ஆட்சியாக
செந்தமிழகம் தொட்டு மலர்ந்திடும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் முத்தானந்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லாது தர்மங்களை சலிப்பின்றி தொடர்ந்து செய்து உலகின் தருமசக்தியை அதிகப்படுத்தி தர்மத்தினை காக்கின்ற தர்மத்தின் தலைவனே அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க. உலகமே போற்றி வணங்கும் உத்தம ஞான அரசே அரங்கா வாழ்க வாழ்க. மக்கள் பல ஜென்மங்களில் செய்திட்ட பாவங்களையும் உமது உபதேசத்தினால் தூயநெறிக் கொள்கையால், தருமச் செயல்களின் துணை கொண்டு போக்கி உலகினில் மக்களை கண்ணியம்பட வாழ வைத்திட சன்மார்க்கம்தனை உலகினர்க்கு உபதேசித்து வழிகாட்டி வருவதோடு, வாழ்ந்தும் காட்டி வரும் காலத்தை வென்ற மரணம் வென்ற மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே, கலியுக ஞானியே அற்புதமான உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 5ம் நாள் 22.10.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே முத்தானந்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் முத்தானந்தர்.

உலகினில் அரங்கமகா தேசிகனார் செய்கின்ற தருமமானது தருமசக்தியை பெருக்கி நல்மக்களை உருவாக்கி வருகின்றபடியினால் தர்மங்கள் செய்து தர்மவான்களாக ஆகினோர் எல்லாம் வாழும் ஞானிகளாக மாற்றவல்ல தருமத்தின் மூலமாக தவசித்திகளை எளிதில் அடைந்திட முடியுமப்பா.

அரசின் பதவிகளில் உள்ள மக்களெல்லாம் நீதிநேர்மையுடன் நடந்து உலக நலனிற்காக தம்மையும், தமது பதவிகளையும் பயன்படுத்தி தருமம் செய்கின்ற மக்கள் எல்லாம் தருமத்தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆசிகளைப் பெற்றிட அவர்கள் செய்திட்ட கர்மவினைகள் எல்லாம் அவர்களை விட்டு அகன்று ஓடி முருகப்பெருமானின் ஆசிபட ஞானவான் அரங்கா உமது அற்புதகரம்பட துன்பப்படுபவர்களும் உம்மை அணுகி தருமம் செய்கின்ற அன்பர்களெல்லாம் அரங்கனின் தொடர்பினில் ஒன்றிணைந்து சேவை ஆற்றிட அவர்களுக்கு சர்வ வல்லமை கிடைத்து கலியுகத்தினில் வாழும் ஞானவான்களாக ஆகிடுவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சேவையின் பயனால் உலகினில் உள்ள அனைவரும் உயர்நிலை பெற்று உலகத்தினை மாற்றம் அடைந்திட செய்திடும். அவர்களெல்லாம் உலகை மாற்றும் மாபெரும் புண்ணிய சக்திகளாக மாறுவார்கள்.

கர்மவினைகள் சூழ்ந்த தேசங்களும் அரங்கனின் தர்மத்தால் செயல்பாடுகளினால் தருமச்செயல்கள் மிகுந்து தர்மசக்தி பெருகி, தரும பூமியாய் மாற்றமடையும். அரங்கன் அருளால் தருமபூமியாக மாறிய அவையெல்லாம் ஞானபூமியாக மாறி இவ்வுலகம் முழுதும் முருகப்பெருமான் தலைமையேற்கும் ஞானஆட்சியாக, முருகப்பெருமானின் ஞானஆட்சியாக, தமிழகம் முதலாக தொடங்கி உலகமெலாம் பரவி உலகமே ஞானஆட்சியாக மாற்றமடையும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் முத்தானந்தர்.

–சுபம்–